# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2008 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் (திருத்தச்) சட்டம்*

---

*(2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2008*, செத்தெம்பர் மாதம் *26* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2008 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் (திருத்தச்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.-ஓ. 30/2008

## 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*1.* இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் (திருத்தம்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சுருக்கப் பெயர்.*

*2.* (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் சட்டத்துக்கான விரிவுப்பெயர், "இலங்கைத் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் பற்றிய தேசியக் குழுவைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் பற்றிய தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைப்பதற்கும் மற்றும் செயல்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும்; தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியலுக்கான செயலணியொன்றை நியமிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும் ; அரசாங்க, தனியார்துறைகளில் தேசியக்கொள்கையின் செயற்பாடு பொறுப்பிக்கப்பட்ட இலங்கைத் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் முகவர் நிலையத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் பற்றிய அமைச்சர்களுக்கிடையேயான குழுவொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; ஒரு தேசியக்கொள்கையை வகுத்தமைப்பதற்கும் அங்கீகரிப்பதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும் ; அரசாங்க, தனியார்துறைகளில் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் பற்றிய உத்திகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அபிவிருத்தி செய்வதற்கும் செயற்படுத்துவதற்குமான அதிகாரத்துடன் இலங்கைத் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் முகவர்நிலையத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்;" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் சட்டத்துக்கான விரிவுப்பெயரைத் திருத்துதல்.*

2-PL 003212 -1,350 (2008/09)

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :$

(1) "1. (1) இச்சட்டம்" என்னும் சொல்லுக்கும் எண்களுக்கும் பதிலாக "1. இச்சட்டம்" என்னும் சொல்லையும் எண்ணையும் இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"சுருக்கப்பெயரும் நடைமுறைக்குவரும் தேதியும்.".

*2 ஆம் பிரிவுக்கு நேர்முன்னர் காணப்படுகின்ற தலையங்கத்தை மாற்றீடுசெய்தல்*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவுக்கு நேர்முன்னர் காணப்படுகின்ற தலையங்கம் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய தலையங்கம் இடப்படுகின்றது :-

"தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் பற்றிய தேசியக் கொள்கையை வகுத்தமைத்தலும் அங்கீகரித்தலும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம், 4 ஆம், 5 ஆம் பிரிவுகளை மாற்றீடுசெய்தல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம், 4 ஆம், 5 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :-

"அமைச்சுகளிடையேயான குழு.

3. இதனகத்துப்பின்னர் ''குழு'' எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்), அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டதுமான அமைச்சுகளிடையேயான குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்; அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் அல்லது அவரது நியமத்தர் ;

(ஆ) தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் முகவர்நிலையம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் அல்லது அவரது நியமத்தர் ;

(இ) கல்வி மற்றும் உயர்கல்வி அல்லது கல்வி அல்லது உயர்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அல்லது விடயத்திற்கேற்ப அவரது நியமத்தர் அல்லது அவர்களது நியமத்தர்கள் ;

(ஈ) இலங்கைத் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் முகவர்நிலையத்தின் பணிப்பாளர் சபையினது தவிசாளரும், தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் சபையின் இன்னுமோர் உறுப்பினரும் ; அத்துடன்

(உ) அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறாக, அரசாங்க நிருவாகம், தொலைத்தொடர்புகள் என்னும் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அத்தகைய எண்ணிக்கையினரான வேறு ஆட்களும், அத்தகைய வேறு வகுதியினரான அக்கறைகொண்டுள்ளோரும்.

குழுவின் தத்துவங்கள் முதலியன.

**4**. (1) இரண்டாம் பிரிவின்கீழ் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவையும், தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் தொடர்பானவையுமான கொள்கைகளை வகுத்தமைத்தல் பற்றி அரசாங்கத்துக்கு மதியுரையளிக்கும் பணி, குழுவுக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) குழுவானது ஒவ்வோராண்டும் ஒருதடவையேனும் கூடுதல் வேண்டும்.

(3) குழுவின் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

குழுவின் பணிகள்.

**5**. நான்காம் பிரிவினால் குழுவுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) இலங்கைத் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் முகவர் நிலையத்தின் விதப்புரையின்மேல், 2 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கென அவர்களிடம் சமர்ப்பிப்பதற்காகத் தேசியக்கொள்கைக் கட்டுக்கோப்பை வகுத்தமைத்தலும் ;

(ஆ) தேசியக் கொள்கைக் கட்டுக்கோப்பைக் காலத்துக் குக்காலம் பரிசீலனைசெய்தலும், அதற்கு அவசியமாகக்கூடிய எவையேனும் மாற்றங்கள் பற்றி அமைச்சரவைக்கு மதியுரையளித்தலும் ;

(இ) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, அரசாங்க மற்றும் தனியார்துறைகளில், இலங்கைத் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் முகவர் நிலையத்தின்மூலம் வழிகாட்டுதலை வழங்குதலும், உத்திகளின் செயற்பாட்டை வசதிப் படுத்துதலும், அவசியமானவிடத்து, இயைபான செயற்படுத்துகின்ற முகவர் நிலையங்களுக்கும் அக்கறை கொண்டுள்ளோருக்கும் காலத்துக்குக்காலம் பணிப்புக்களை வழங்குதலும் ;

(ஈ) தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் துறைக்கும் சேவைகளுக்கும் இயைபான மனித வளங்கள் அபிவிருத்திக்கும் சந்தை உருவாக்கு கைக்குமான தோதான நியமங்களை அடையாளங் காணுதலும், அபிவிருத்தி செய்தலும், கடைப்பிடிக்கச் செய்வித்தலும், சிறந்த செயல்முறைகளை விதந் துரைத்தலும் ;

(உ) இலங்கைத் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்ப வியல் துறையை அபிவிருத்தி செய்வதற்கு அவசிய மான உள்ளகக் கட்டமைப்பு வசதிகளைச் சீராக்கு தலும் இணைப்புகளிடையே செயற்படத்தக்க தகவல் தொழில்நுட்ப முறைமைகளையும் அபிவிருத்தி செய்வதற்கும் ஈடுபடுத்துவதற்குமான நடவடிக்கை களை எடுத்தலும் ;

(ஊ) தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியலின் எல்லா அம்சங்களிலும் ஆராய்ச்சியை மேம்படுத்து தலும் நடாத்துதலும் ;

(எ) குழுவின் பணிகளைப் புரிவதற்கும் ஆற்றுவதற்கும், இலங்கையில் தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியலை அபிவிருத்தி செய்வதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு காரியங்களைச் செய்தலும் ; அத்துடன்

(ஏ) சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன் கொடுப்பதற்கான ஒழுங்குவிதிகளை ஆக்குவதனை அவசியமான விடத்து விதந்துரைத்தலும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், ''செயலணிக்கும் குழுவுக்கும் துணைபுரிவதற்கான நிறைவேற்று முகவர் நிலையமாக இருத்தல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''குழுவுக்குத் துணை புரிவதற்கான நிறைவேற்று முகவர் நிலையமாக இருத்தல் வேண்டுமென்பதுடன், தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியல் பற்றிய உத்திகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்படுத்துதலும் வேண்டும். முகவர்நிலையமானது, குழு அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் அதன் பணி களை ஆற்றுவதிலும் அதனால் தேவைப்படுத்தப் படும் எல்லா உதவிகளையும் அளித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய குழுவுக்கான செயலகமாகவும் பணியாற்றுதலும் வேண்டும்;'' அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(i) அதன் (ஆ), (இ), (ஈ) மற்றும் (எ) என்னும் பந்திகளில் முறையே, "தேசியக் கொள்கையிலும் மற்றும் செயல்திட்டத்திலும் உள்ளடக்கப்பட வேண்டிய" என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தேசியக் கொள்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய" என்னும் சொற்களையும், "தேசியக் கொள்கையினதும் செயல் திட்டத்தினதும் செயற்பாட்டுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேசியக் கொள்கையினது செயற் பாட்டுக்கு" என்னும் சொற்களையும், "தேசியக் கொள்கைக்கும் செயல்திட்டத்துக்கும் ஏற்ப," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேசியக் கொள்கைக்கு ஏற்ப" என்னும் சொற்களையும், "தேசியக் கொள்கையிலும் செயல் திட்டத்திலும் உள்ளடக்கப்படுவதற்குத்'' என்னும் சொற் களுக்குப் பதிலாக, "தேசியக் கொள்கையில் உள்ளடக்கப்படுவதற்குத்" என்னும் சொற்களை யும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ii) அதன் (ஊ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(ஊ) தேசியக் கொள்கையைத் தயாரிப்பதில் மற்றும் திருத்துவதில் அல்லது மீளாய் வதில் கவனத்துட்கொள்ளப்படவேண்டிய கருமங்களை அடையாளங்காணுதல் ;"; அத்துடன்

(iii) அதன் (ஏ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(1) அமைச்சர், காலத்துக்குக்காலம், அக்கறை கொண்டுள்ளோரின் கலந்தாலோசனையுடனும், குழு வினாற் செய்யப்பட்ட முடிபுகளின் விளைவாகவும், தகவல் அத்துடன் தொடர்புத் தொழினுட்பவியலின் அபிவிருத்தி தொடர்பான கருமங்கள் பற்றி அத்தகைய பணிப்புக்களையும் வழிகாட்டுநெறிகளையும் முகவர் நிலையத்துக்கும் ஏனைய பகிரங்க உருவகங்களுக்கும் வழங்கலாம்.".

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை அதன் (2) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "செயலணி யினதும்" என்னும் சொல்லை விட்டுவிடுவதன் மூலமும்.

*ஒவ்வாமை விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்